
www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் போராளிகள்

தோழர் சி. இருபாகரன் (செல்வன்)
திருகோணமலை

தோழர் சா. லோகேந்திரராஜா(அகிலன்)
மூதூர்



ஆகியோருக்கு



# எமது இதய அஞ்சலிகள்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (PLOT) திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் தோழர் சின்னத்துரை இருபாகரன் (செல்வன், சைமன், வல்லிபுரம்) மூதூர் பகுதி அமைப்பாளர் தோழர் சாமித்தம்பி லோகேந்திரராஜா (அகிலன்) ஆகியோர் PLOT இராணுவத்தினரால் மார்ச் 26, 1985 அன்று மூதூரில் வைத்து ஆயுதமுனையில் கடத்தப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்ற துயரச் செய்தியை மிகவும் வேதனையுடன் அறியத் தருகின்றோம்.

தோழர் இருபாகரன் பேராதனை பல்கலைக்கழக மாணவன். 1981ம் ஆண்டிலிருந்து PLOTன் அங்கத்தவராக இருந்து வந்தவர். இவரின் கடுமையான உழைப்பு திருகோணமலை மாவட்டத்திலும் மாத்திரமன்றி வடமராட்சி மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் PLOT வேரூன்ற காரணமாக இருந்தது. PLOTன் செயலதிபர் உமாமகேஸ்வரன் சிறிலங்கா அரசாங்கத்தினரால் தேடப்பட்ட காலத்தில் அவருக்கு திருகோணமலை மாவட்டத்தில் புகலிடம் கொடுத்து பாதுகாத்த முக்கிய பொறுப்பினை தோழர் இருபாகரன் தனது மாணவப்பருவத்தில் திறம்பட ஆற்றியிருக்கின்றார்.

1981ல் காந்தியம் திருகோணமலை மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டபோது அதன் குடியேற்ற திட்டங்களில் முன்நின்று உழைத்தவர். காந்தியத்தில் பணியாற்றியபோது சிறிலங்கா இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு கடுமையான சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார்.

PLOTன் திருகோணமலை மாவட்ட பிரச்சார செயலாளராக பணியாற்றிய காலத்தில் PLOTன் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் தோழர் யோகன் கண்ணமுத்து கைது செய்யப்பட்டிருந்தபோது தோழர் யோகன் கண்ணமுத்துவை விடுதலை செய்யக்கோரி போராட்டங்களை நடத்தியவேளை இவர் மீண்டும் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டார். PLOTக்கு தென்னிலங்கையிலுள்ள முற்போக்கு சக்திகளுடன் தொடர்புகளை ஏற்படுத்த பங்காற்றிய தோழர் இருபாகரன் தென்னிலங்கை தோழர் ஒருவருடன் சிறிலங்கா ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டு பலத்த சித்திரவதை செய்யப்பட்டபோது சகதோழர்களையும் தாபனத்தையும் காட்டிக்கொடுக்காத விசுவாசமான மனவுறுதிமிக்கவராகத் திகழ்ந்தார்.

ஆகஸ்ட், 1983 இலிருந்து PLOTன் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளராகப் பணியாற்றிவந்த தோழர் இருபாகரன் PLOTன் தவறான போக்குகளுக்கெதிராக கடுமையான விமர்சனங்களை முன்வைத்து PLOT தலைமையுடன் முரண்பட்டிருந்தார். இவர் கடந்த பெப்ரவரி 15, 1985 இலிருந்து PLOTன் நடவடிக்கைகளிலிருந்து முற்றாக அதிருப்தியுற்று ஒதுங்கியிருந்தார்.

தோழர் லோகேந்திரராஜா மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அமைதியான சுபாவமும் ஆரவாரமில்லாத கடுமையான உழைப்பும் கொண்ட இவர் சிறிலங்கா ஆயுதப் படைகளின் கடுமையான தேடுதல்களின் மத்தியிலும் துணிகரமாகப்பணியாற்றினார். எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் முஸ்லிம் மக்களின் ஐக்கியத்தை வலியுறுத்திய தோழர் லோகேந்திரராஜா, அதற்காக அரும்பாடுபட்டு உழைத்தார். மூதூரில் ஏற்பட்ட இனக்கலவரத்தின்போது தமிழ்- முஸ்லிம் மக்களின் ஐக்கியப்பட்ட போராட்டத்திற்கு இவர் சேவை பெரிதும் துணை புரிந்தது, ஏப்ரல், 1984 இலிருந்து மூதூர்பகுதி அமைப்பாளராகப் பணிபுரிந்த தோழர் லோகேந்திரராஜா PLOT தோழர்கள் கட்டுப்பாடும் நேர்மையும் உடையவர்களாக வாழவேண்டும் என வலியுறுத்தி வந்ததுடன் அதற்கு முன்னுதாரணமாகவும் திகழ்ந்தார். இவரும் PLOTன் அண்மைக்கால அடாவடித்தனங்களைக் கண்ணுற்று விரக்தியடைந்து PLOT இலிருந்து வெளியேறியிருந்தார்கள்.

இந்த இருதோழர்களும் மரணத்திற்கு என்றும் அஞ்சி வாழ்ந்தவர்களல்ல. வேதனைகளையும் சோதனைகளையும் சவாலாகக்கொண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக தம்மை அர்ப்பணிக்க திடம்கொண்ட இவர்களை வேலியே பயிரைமேய்வதுபோல் PLOT இராணுவமே பதவிப்போட்டியாலும், பொறாமையாலும் வீணாக இவர்கள் இன்னுயிரைப் பறிப்பார்கள் என்று யாருமே கற்பனைகூட பண்ணியிருக்கவில்லை. விடுதலை உணர்வுகொண்ட அனைவருக்குமே இந்தத் துயரங்கள் புரியாத மர்மங்கள் தான்.

இவ்விரு தோழர்கள் மீதும் பல அவதூறு குற்றச்சாட்டுகளை PLOT சாத்தியது. பாட்டிக் கொள்ளைக்காரர்களாம்; பண மோசடி செய்தார்களாம்; பலாத்காரம் புரிந்தார்களாம் என தமது இஷ்டப்படி குற்றங்களை அடுக்கிச் செல்லும் PLOT இனால் இந்தக் குற்றச்சாட்டுகளில் எதையாவது நிரூபிக்க முடியுமா?

விசாரணையை அங்கத்தவர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் அம்பலப்படுத்துவோம் என்றவர்கள அதற்கு முன்னரே தோழர்களிருவரையும் படுகொலை செய்தமைக்கு காரணம் கூறுவார்களா?

இவ்விரு தோழர்களையும் விசாரணைக்கென்று இந்தியாவிற்கு அனுப்பிவைத்த உண்மையை PLOTன் தளநிர்வாகப் பொறுப்பு ஏற்கனவே ஒத்துக்கொண்டிருக்கிறது. இவர்களை இங்கு அங்கத்தவர்கள் முன்னிலையில் விசாரிப்பதற்கு சம்மதித்தவர்கள் இப்போது என்ன கூறப்போகின்றார்கள்.

இத்தகைய கொடுமைகள் கேட்பாரற்று அரங்கேறும் கடமைகள் முழு தமிழீழ மக்களும் வெட்கித் தலைகுனியும் வேதனை மிகு சம்பவங்களாகும்.

இந்த கொலைகாரர்களுக்கு இன்னமும் உணவும் உறைவிடமும் அளித்து ஆதரவு வழங்கும் தமிழ் மக்கள் தமது வெட்கக்கேடான செயற்பாட்டினை இனிமேலாவது மீள்பரிசோதனை செய்யும்படி கேட்கின்றோம். நீங்கள் PLOTற்கு வழங்கும் ஆதரவு தமிழீழப் போராளிகளை அழிப்பதற்கே என்பதனை நினைவுபடுத்துகின்றோம்.

தோழர்கள் இருபாகரனும், லோகேந்திரராஜாவும் இன்று எம்மிடையே இல்லை. சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டபோதும், சிறிலங்கா இராணுவத்தின் பகைச் செயலுக்கும் தோழர்களிருவராலும் உயிர்தப்ப முடிந்தது. ஆனால் ஒன்றிக்கலந்த PLOT இராணுவத்தின் பகைமையை இவர்களினால் வெல்லமுடியாமல் போய்விட்டது. மறைந்த எம்மிரு தோழர்கட்கும் எமது இதய அஞ்சலியை செலுத்துகின்றோம். இந்தத் தியாகச் செம்மல்களின் பணியைத் தொடர ஆயிரமாயிரம் இதயங்கள் என்றுமே தயாராகவிருக்கின்றனஎன்று உறுதியிட்டுக் கூறுகின்றோம.

இந்த இளம் போராளிகளைப் பறிகொடுத்து தவிக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோழர்கள் இருபாகரனும் லோகேந்திரராஜாவும் தமது இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டதனை தெரிந்து கொண்ட பின்பும், அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை ஆராய்கின்றோம்: உட்கட்சிப் போராட்டம் நடத்துகின்றோம் PLOT இனை ஜனநாயக ரீதியான அமைப்பாக மாற்றுகின்றோம் எனப் பாசாங்கு செய்துகொண்டு தங்கள் பதவிகளையும் சலுகைகளையும் காப்பாற்றிக்கொண்டு PLOTன் அராஜகப் போக்குகளுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டிருக்கும் PLOT தோழர்களே!

உங்களுக்கு ஒரு வார்த்தை

நேற்று
உங்கள் இயக்கத்தினர்
சக இயக்கத் தோழர்களை
சமூகவிரோத துரோகி என்று
படு கொலை செய்தனர்,
நீங்கள்
ஏனென்று கேட்கவில்லை
நியாயப்படுத்தினீர்கள்.
இன்று
உங்கள் இயக்கத்தினர்
சக தோழர்களையே
உளவாளி, ஊடுருவல் என்று
படுகொலை செய்கின்றார்கள்.
நீங்கள்
ஏனென்று கேட்கவில்லை
நியாயப்படுத்துகின்றீர்கள்.
நாளை
உங்கள் இயக்கத்தினர்
உங்களையே கொலை செய்வார்கள்.
அப்போது [illegible]
ஏனென்று கேட்கப் போவதில்லை
அதை
நியாயப்படுத்துவார்கள்.
~~[illegible] தோழர்கள்~~

**PLOT இலிருந்து வெளியேறியவர்கள்**
தமிழீழம்

ஆகஸ்ட் 5, 1985

இத்துண்டுப் பிரசுரம் தீப்பொறி வெளியீட்டினரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Tamils For A Democratic Eelam,
B.M Box 4338,
London WC1N 3XX.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்